14/04/2019

**பத்திரிக்கை செய்தி - மக்களவை தேர்தலில் தமிழகத்தில் நிற்கும் வேட்பாளர்களின் சொத்து, வருமானம், குற்ற வழக்கு மற்றும் மற்ற பின்னணி குறித்த ஆய்வறிக்கை வெளியீடு**

ஜனநாயக சீர்திருத்த அமைப்பும் தமிழ்நாடு தேர்தல் கண்காணிப்பகமும், மக்களவை தேர்தலில் தமிழகத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் குறித்த குற்றப்பின்னணி, சொத்து விவரம் மற்றும் மற்ற பின்னணி குறித்த ஆய்வறிக்கை இன்று வெளியிடப்படுகிறது. அதன் முக்கிய குறிப்புகளை இங்கே காணலாம்

1. நிற்கக்கூடிய 845 வேட்பாளர்களில் 802 வேட்பாளர்களை ஆய்வு செய்துள்ளோம்.
2. 802 வேட்பாளர்களில், 13 % வேட்பாளர்கள் (101 வேட்பாளர்கள்) மீது குற்ற வழக்கு நிலுவையில் உள்ளது. 8 % வேட்பாளர்கள் (67 வேட்பாளர்கள்) மீது தீவிர குற்ற வழக்கு நிலுவையில் உள்ளது. கட்சியில் நிற்கக்கூடியவர்களில் அதிக வழக்கு (12 வழக்கு) பா.ம.க வேட்பாளர் அன்புமணி ராமதாஸ் மீது உள்ளது.
3. 802 வேட்பாளர்களில், 23 % வேட்பாளர்கள் (184 வேட்பாளர்கள்) கோடிஸ்வரர்கள். தி.மு.க வில் 23 வேட்பாளர்களும் அ.தி.மு.க வில் 22 வேட்பாளர்களும் மக்கள் நீதி மையத்தில் 19 வேட்பாளர்களும் நாம் தமிழர் கட்சியில் 12 வேட்பாளர்களும் இந்திய தேசிய காங்கிரஸில் 7 வேட்பாளர்களும் பா.ஜ.க வில் 5 வேட்பாளர்களும் கோடிஸ்வரர்கள். மொத்த வேட்பாளர்களின் சராசரி சொத்து 3.46 கோடி.
4. முதல் மூன்று அதிக சொத்து வைத்திருப்பவர்கள் - இந்திய தேசிய காங்கிரஸ் சேர்ந்த வசந்தகுமார் (417 கோடி), சுயேட்சையாக நிற்கும் அ.ம.மு.க வேட்பாளர் இசக்கி சுப்பையா (237 கோடி) மற்றும் அ.தி.மு.க வேட்பாளர் ஏ.சி.சண்முகம் (126 கோடி).
5. கட்சி ரீதியாக வேட்பாளர்களின் சராசரி சொத்து. இந்திய தேசிய காங்கிரஸ் 70.29 கோடி, தி.மு.க - 25.91 கோடி, பா.ம.க 23.03 கோடி, பா.ஜ.க 21.54 கோடி, தே.மு.தி.க 17.18 கோடி, அ.தி.மு.க - 14.27 கோடி, மக்கள் நீதி மையம் – 2.48 கோடி மற்றும் நாம் தமிழர் கட்சி – 77 லட்சம்

6. அதிக கடன் உள்ள 3 வேட்பாளர்கள் – இந்திய தேசிய காங்கிரஸ் கன்னியாகுமாரி வேட்பாளர் வசந்த் குமார் - 154 கோடி, சுயேட்சை தஞ்சாவூர் வேட்பாளர் முருகேசன் - 36.35 கோடி மற்றும் அ.தி.மு.க வேலூர் வேட்பாளர் ஏ.சி.சண்முகம் - 36.31 கோடி.
7. 140 (17%) வேட்பாளர்கள் தங்களது PAN எண்ணை தெரிவிக்கவில்லை.
8. வருமான வரித்துறைக்கு 2017-18 ல் அதிக வருமானம் (மொத்த வருமானம்) தாக்கல் செய்த 3 வேட்பாளர்கள். இந்திய தேசிய காங்கிரஸ் கன்னியாகுமாரி வேட்பாளர் வசந்த் குமார் - 28.95 கோடி, தி.மு.க மத்திய சென்னை வேட்பாளர் தயாநிதி மாறன் - 3.8 கோடி, தி.மு.க கள்ளக்குறிச்சி வேட்பாளர் கௌதம சிகாமணி - 3.44 கோடி.
9. வேட்பாளர்களில் கிட்டத்தட்ட 50 % வேட்பாளர்கள் பட்டதாரிகள், 8% மட்டுமே பெண் வேட்பாளர்கள், 38% வேட்பாளர்கள் 40 வயதுக்கு உட்பட்டவர்கள்.
10. இதைத் தவிர மக்கள் பிரச்சனை குறித்த ஆய்வறிக்கையும் வெளியிடப்பட்டுள்ளது. தமிழக மக்களின் மிக முக்கிய பிரச்சனை வேலைவாய்ப்பு, தரமான சுகாதாரம் மற்றும் குடிதண்ணீர் என ஆய்வில் வெளிவந்துள்ளது.


Dr P. Sudarshan
Trustee – ADR and Coordinator – TN Election Watch
Ph: 9444008125

Deepa Seshadri
TN Election Watch
Ph: 9940111229

Jayaram Venkatesan
TN Election Watch
Ph: 9841894700

| Media and Journalist Helpline | Maj. Gen. Anil Verma (Retd.) | Prof. Trilochan Sastry | Prof. Jagdeep Chhokar |
|---|---|---|---|
| +91 8010394248 | Head – ADR & NEW | IIM Bangalore | IIM Ahmedabad (Retd.) |
| +91 9444782884 | 011 4165 4200, | Founder Member- ADR & NEW | Founder Member – ADR & NEW |
| +91 9940111229 | +91 88264 79910 | +91 94483 53285 | +91 99996 20944 |
| +91 8586847977 | adr@adrindia.org, | trilochan@iimb.ac.in | jchhokar@gmail.com |
| adr@adrindia.org | anilverma@adrindia.org | | |